647

உ

முருகன் துணை.

# கோட்டூர்க்

# குருசாமி ஒயிற் கும்மி

MADRAS

இது

திருச்சுழிகையிலிருக்கும்

ஸ்ரீ. பழனிக் குமாரநாடார் அவர்கள் குமாரர்

ம-ா-ா-ஸ்ரீ

அருஞ்சுனைமுத்துநாடார்

அவர்களால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1911.

...லை அணா-௧.

...right reserved.

O-,85MAM,K
N11
14245

உ

முருகன் துணை.

கோட்டூர்க்

# குருசாமி ஓயிற் கும்மி.

இது

திருச்சுழிகையிலிருக்கும்

ஸ்ரீ. பழனிக் குமாரநாடார் அவர்கள் குமாரர்

ம-ா-ா-ஸ்ரீ

அருஞ்சுனைமுத்துநாடார்

அவர்களால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1911.

விலை அணா - க.

*Copy-right reserved.*

# பதிப்பித்தோர் சிறப்பு.

வித்வான்

கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

இயற்றியது.

மதிதரு முத்த மொருவன்கா றேய்க்க
    மண்ணிடைத் தேய்வுறு முயர்வேய்
வருஞ்சவி முத்த மதனழல் வெதுப்ப
    மாமைபோய்க் கருநிற முறுஞ்சொற்
பொதிதரு முத்தம் பகட்டினுற் பிளவு
    பொருந்துறு மிப்பிமீன் வளைகள்
பொழிமுத்தம் வெய்ய புலவினை வீசும்
    பூவையர் பொற்புறுங் களத்தி
லுதிதரு முத்த மவர்கண வரர்கை
    யுறவதுக் குறுநறுங் கழையின்
ஒளிர்முத்த மாலை வாய்நெரிந் தழியு
    முறுமிவற் றரில்பொருந் தாமற்
றுதிதரு குணத்தா லொளியினுற் றுலங்கித்
    தோன்றலர்க் காரணி யாகிச்

## பதிப்பித்தோர் சிறப்பு.

சோதிசேர் தங்க மெனுநயப் பெயருஞ்
சொலப்பெறு மருஞ்சுனை முத்தாம். (க)

என்பெரு நேசன் திருச்சுழி வாச
னியாவர்பா லும்விசு வாசன்
எழிற்பிர காசன் சத்சக வாச
னீசனுக் கரும்பெருந் தாசன்
பன்பெரு விரத முறுமுப வாசன்
பாசமி லாப்பிர யாசன்
பவவினை நாசன் பனிமலர் வாசன்
பாவலர்க் கொருபெரும் போசன்
மன்பெரு வ்யாசன் மொழியிதி யாச
மதித்துணர் புத்திவி காசன்
மைந்தறுங் கேசன் மற்றுமிங் கேசன்
மார்க்கமே செலுமள கேசன்
கொன்பெரு லேச முற்றகி லேசங்
கொண்டிடா தொளிருமுல் லாசன்
குருவுப தேசங் கொள்குரு சாமிக்
கும்மியைப் பதித்தனன் மாதோ. (உ)

147451

---

உ

முருகன் துணை.

# கோட்டூர்க்

# குருசாமி ஓயிற் கும்மி.

## காப்பு.

திருவளர் கோட்டூர்க் குருசாமி தெய்வீகம்
பெருகும் ஓயிற்கும்மிப் பாட்டுரைக்கச்
சித்திக்கொரு-வித்துப்பொருள்-முத்திக்கருள்-சத்திக்கண
சித்தி விநாயகன் காப்பாமே. (க)

மருவளர் பொன்னகர் தன்னிலே கற்பகத்
தருநிழ லில்வளர் தேவருக்கு
வந்ததுயர் - சிந்தவருள் - கந்தனிரு - செந்தாமரை
மலரடி யென்றைக்குங் காப்பாமே. (உ)

கோட்டூர் வளர்குரு சாமி மகத்துவங்
கூட்டியோர் கும்மிப் பாட்டுரைக்கக்
குகனைத்திரு - மகனுகவே - சுகமுற்றருள் - தகமெய்ப்புகழ்க்
கொன்றை யணிசிவன் காப்பாமே. (ங)

ஏட்டினி லாடும் எழுத்தாணி போலுமென்
கூட்டினி லாடுங்குரு சாமியின்மேல்
இனிதாயொரு - மனதாகவே - தனியாயுனுங் - கனிபோலவே
இயம்பிட மால்பதந் தான்றுணையே. (ச)

அலையின்மே லுற்ற துரும்புபோ லென்மனம்
அலைந்து லைந்துமெலி யாவிதமே
அயனுரிடு - நயமாகிய - செயமேபெறும் - சுயமாமலர்
அடியிணை யென்றைக்குங் காப்பாமே. (ரு)

மலைமக ளுங்கல்வி தன்னி லுகந்திடுங்
கலைமக ளும்மலர் மாமகளும்
மனமேயனு - தினமாகவே - யெனையாளுவர் - தனதாகவே
மாசில்லா மூவர் பதந்துணையே. (சு)

## அவையடக்கம்.

பாரிய நன்னூல் இலக்கணந் தன்னுடன்
காரிகை தேறித் தெளிந்தவர்முன்
பையன்திரு - வையம்மதில் - மெய்யாகவே - செய்யும்பிழை
பாவலர் யாரும் பொறுப்பீர்களே. (எ)

கூரிய மாமயில் ஆடிட வான்கோழி
வீரியம் மீறியே ஆடுதல்போல்
குறையாமலே - மறையாவையும் - முறையாயுணர் - நிறைபாவலர்
கூறுமென் னூற்பிழை தேறுவரோ. (அ)

எட்டுமி ரண்டுந்தொகை செப்பிடா ஏழைநான்
கட்டுமெட் டாக உரைத்தபுன்சொல்
எள்ளத்தனை - தள்ளத்தகா - துள்ளத்திலே - கொள்ளத்தகும்
இசைகவி யோர்க்குவந் தனஞ்செய்தே. (கூ)

பட்டுக் கயிற்றினில் முத்தையுங் கோவையாய்
இட்டுமே திட்டஞ்செய் பாவனைபோல்
பட்சத்தொடு - மெச்சப்புவி - இச்சைப்பட - சுவச்சத்துடன்
பகர லாயினேன் இப்புவிமேல். (க0)

சார்வரி வருடமீன் மாசந் தன்னில்
கூறும் அறுநான்கு தேதியிலே
சதுரத்திரு - வதிகப்பெரும் - மதுரத்தினை - யதுசித்திரை
சார்ந்த சுக்கில வாரமதில். (௧௧)

சீர்பெறும் நல்வேளை தன்னிலே யிந்தப்
பார்புக ழும்மேஷ ராசியிலே
தேறுங்கவி-கூறும்புல-வோரும்மன - மீறும்படி
செப்புகின் றேன்புத்தி தான்சிறியோன். (௧௨)

கோதில் லாச்சாமி நகரிற்கண் ணப்பமென்
றோதிய கோத்திரத் தேயுதித்த
குறையாமலே - யிறையோனடி - அரைநாழிகை - மறவாவதி
குணமிகும் அங்கப்பன் நற்றவத்தால். (௧௩)

தீதில்லாப் புத்திர னுகவே யிப்புவி
மீதில் உதித்திடும் அங்கமுத்து
திரமாகவே - வரமேயருள் - குருசாமியின் - அருளாலிதைச்
செப்புவ தெப்படி யோவென்னில். (௧௪)

சத்த மிகுக்குயில் தான்தொனி செய்திடச்
சுத்தமில் லாத கருங்காக்கை
தாகக்கன - போகத்தொடு - ஏகத்தொனி - யாகப்புகல்
தன்மையைப் போலுமிவ் வையகத்தில். (௧௫)

சித்த மகிழ்ந்து கவிக்கட லென்னவே
மெத்தவுங் கற்றறிந் தோர்கள்முன்னே
சிறியோன்பொருள்-அறியாதவ-னறிவோர்பத- வெறிமாமலர்
சிரசின்மேல் வைத்துக்கை கூப்பிநின்றே. (௧௬)

சிரில்லா வாழைநார் பூவோ டணைந்ததும்
சூரிய மாமணங் கொள்வதுபோல்
செகமெச்சிய - மிகவற்புத - சுகமுற்றிடு - திசழ்பொற்பதத்
தெய்வக் குருசாமி யாருடைய. (௧௭)

பேரிச் சிறுநூல் தன்னி லிருக்கக்கவி
தேறுவோர் தாமிக ழாரென்றே
பேசத்துணிந் - தாசைப்பிர - காசத்துட - னேசத்தமிழ்
பிரியமாய்ச் செப்பிட வேயிசைந்தேன். (௧௮)

கற்புள்ள மாதை மணந்த வருங்கதை
அற்புத மாகப் புகன்றவரும்
காலஞ்சரி - யாலஞ்சுமை - தாலம்மதி - லேவாழ்ந்தவர்
கயிலைசேர்ந் தும்பேர்மங் காததுபோல். (௧௯)

இப்புவி தன்னிலே கண்கண்ட தெய்வமாய்
எப்போதுந் தப்பாம லெங்குநிறைந்
திருக்குமதி - பெருக்கமுகந் - திருக்குங்குரு - சாமியின்பே
ரெப்போது மங்கா திருந்திடவே. (௨0)

செந்திரு தங்குயர் கோட்டூர்க் குருசாமி
மந்திர மோது மகத்துவத்தைச்
சிங்கத்தினை - யங்கத்துடன் - பங்கப்பட - வுங்கற்பனை
தேறுங் கவியோர்முன் செப்பலுற்றேன். (௨௧)

நூல்.

சுந்தர மேமிகும் இப்புவி தன்னிலே
தந்திர மிகுஞ்சில மாந்தருக்கே
துன்பமிகு - வம்புமுயர் - கும்பியது - வெம்பும்படி
தொண்டைப் பிளவை யுடன்சிலந்தி. (௨௨)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUL 1911
MADRAS.

சத்தி யரிச்சந்த்ரன் உபாதைப் படமுன்னாள்
வெற்றியாக் கோசிகன் செய்ததுபோல்
சதிரத்திலே - விதனப்பட - அதிகப்பெரு - வலியுற்றிடத்
தான்றோன்றும் ராசப் பிளவைகளும். (உ௩)

புத்தி மிகுந்திடும் மாந்தருக் கேகன்னப்
புற்றுட னுச்சிப் பிளவைகளும்
பொய்யொன்றிலே - ஐயோவது - மெய்யாகவே - செய்யுந்துயர்
புகன்றிட நாவொன்று லாகாதே. (உ௪)

இன்னமு மிப்புவி தன்னில்வாழ் மாந்தர்கள்
தன்னுடல் வெம்புமத் துன்பங்களை
ஏதென்றதை - யாதுற்றினி - யோதத்தகும் - நீதத்துடன்
என்றனாற் சொல்ல வசமாமோ. (உ௫)

தன்னை யடைந்தோரைக் காக்குங் குருசாமி
தன்பெரு மகிமை சாற்றரிதே
தவமுற்றிய - சிவனைத்துதி - கவனத்தொடு - புவனத்திலே
தங்கி வளர்சில மாந்தருக்கு. (உ௬)

சங்கை யுடனேமுன் சொன்ன வியாதிகள்
தங்கிய பேரங்கே யாதுரைப்பார்
சதியோவயன்-விதியோவென்ன-கதியோமிக-வதியென்றுளம்
தயங்கித் தியங்கி மனமுடைந்து. (உ௭)

செங்கையில் மான்மழு இங்கித மாய்ப்புவி
எங்கும் மகிழத் தரித்தசிவா
திரமாகவே - யரவாமதை - புரமாயணி - பரிபூரண
சிவனே யுயர்ந்த பராபரனே. (உ௮)

இந்த விதமாக எங்களுக்குத் துன்பம்
வந்ததென் றேதண்ணீர் தான்ததும்பி
இடிமோதவே - துடியாமரம் - படிமீதிலே - யடியோடது
எவ்விதம் வீழுமோ அவ்விதமே. (உகூ)

சிந்தை கலங்கித் தியங்கியே யீதென்ன
விந்தையென் றேயன்னை தந்தையரும்
சிவமேயெவ - ரவமோவென்ன - பவமோவருந்-தவமோவெனச்
சேரத் திருக்கரத் தாலணைத்து. (௩0)

தாங்கி யவரவர் சாதி சனம்புகழ்
ஓங்கும் வயித்தியர்க் கண்டழைத்துத்
தாக்குந்துயர்-போக்குஞ்சில-ருக்கள்தாரோம்-சோக்காயினித்
தயவாய் மருந்திட்டுப் பாருமென்றார். (௩க)

நீங்குடன் சிக்குவந் தோர்தின மும்மனந்
தேங்கி யுரைக்க வயித்தியர்கள்
சிக்கானது - தாக்காவிதம் - ஏற்கௌடதம் - தீர்க்கம்முடன்
செய்தார் வியாதி யறிந்தறிந்தே. (௩உ)

செவ்வித மாகவே யறிந்தவு டதம்மனம்
ஒவ்வியே மூன்றுநாள் செய்திடவே
சிவனார்செயல்-பவநீங்கியே-தவமேவியோர்க்-குபயோகமாய்த்
தீர்ந்து சிலர்கள் சுகமானார். (௩௩)

எவ்வித மான ஔஷதம் அருந்தினும்
செவ்வித மாகாதோ ரேதுரைப்பார்
என்னவிதி - யென்னசதி - யென்னகதி - யென்னவதி
என்றிரு கண்களில் நீரொழுக. (௩௪)

சந்தி ரனைச்செஞ் சடைதனி லணிசோம
சுந்தர னேமகா மந்திரனே
சதியாகவே - முதியோர்மனங் - கொதியாகவே - மதியாமலே
சற்பனே யேதேது செய்தோமோ. (௩ரு)

தந்தைதா யானவர் சிந்தைகள் நோகவே
நிந்தையும் விந்தையாய்ச் செய்தோமோ
சனிபோலவே - அனியாயமாய்த் - தனியாவித - மினிமேலிவண்
சகிக்க முடியாதென் றேயுரைத்தார். (௩சு)

அருகே யிருந்திடும் பந்து ஜனம்மனம்
உருகி யிதுவென்ன காலமென்று
அவுஷதமதைப் - பவிசாகவே - செவிதாயுணச் - சவிதமின்னம்
ஆகாத தென்ன அனீதமென்று. (௩எ)

பெருகுந் துயரமாய் ஏகி யவர்க்குற்ற
அருமைப் பெரியோர்முன் னேயுரைத்தார்
பெரியோர்களுந் - துரிதாகவே - குருசாமியின் - பிரதாபமே
பேசுவார் வாய்திறந் துண்மையுடன். (௩அ)

மாரியா விப்புவி தான்செழிக் குங்குணக்
காரியே பாரியா கும்மதுபோல்
மாசற்றறி - நேசத்துடன் - வாசப்பிர - காசத்தயன்
மானிட ராகப் படைத்தவர்க்கு. (௩கூ)

சீரில்லாக் கன்னேசி விப்புருதி சழம்
பீறியே மீறும் பிளவைகளும்
சேரகவே - தீராமலே - வீறுகினுற் - கூறுக்கிடும்
செகம்புகழ் கோட்டூர் நகர்வளரும். (௪0)

குருசாமி திருநாமம் ஒருதரங் கூறியே
திருநீறும் எண்ணெயும் போட்டிடவே
குறையாமலே - கரைதாவியே - நிறையாகவே - சலமேவினல்
குறுக்கே யுடைத்தோடும் பாவனைபோல். (சுக)

பருவு சிலந்தி பிளவைகளும் ரத்தம்
பெருகும் வியாதிக ளத்தனையும்
பகருஞ்செக - குகநாதனல் - தகருங்கிர - வுஞ்சம்மெனப்
பகிரலாம் நெஞ்சம் மயங்காதீர். (சுஉ)

ஐயர் குருசாமி யானவ ராலிந்த
வைய மதிற்றீர் வியாதிகளை
அறிவானது - விரிவாகிய - பெரியோர்களே - துரிதாகவே
அன்பர்க் கின்பமா யேயுரைப்பீர். (சுங)

மெய்யாக வேகுரு சாமி நிவர்த்திகள்
செய்யும் வியாதியைச் செப்புகின்றோம்
மிடியாகவே - வெடிசூலையும் - கொடியாகவே - யெரிதாவிடும்
மிக்க நரம்புச் சிலந்திகளும். (சுச)

கண்டமாலை தடைவாழை கன்னப் புற்றும்
மண்டைக் கரப்பான்கக் கச்சிலந்தி
கடுக்கவலி - துடுக்காகவே - கொடுக்கும்வெகு - முடுக்காகவே
கபாலப் புற்றுமா ராணிகளும். (சுரு)

தண்டுப் பிளவை பவித்தி ரம்முளை
கண்டு பயங்கொள் பிளவைகளும்
சந்தமது - வந்தமுடன் - விந்தைவெகு - நிந்தையுடன்
தான்கம்முக் தொண்டைப் பிளவைகளும். (சுகா)

மரமும் மரத்தின்மே லேறியே யந்த
மரத்தை மரத்தினுற் குத்துதல்போல்
மனிதர்களுக் - இனிதாகவே - யனியாயமாய்த் - தனியாதபுண்
மாற்ற வெவராலு மாகாதே. (௪௭)

மரமுண்டு மண்ணில் முளைத்த தில்லையது
மரத்தோடுஞ் சேர்ந்து மரமேறும்
மார்க்கமதி - தீர்க்கமுடன் - ஏற்கும்பிணி - தாக்காவிதம்
மாற்றிரட்சிப் பார்குரு சாமியவர். (௪௮)

சதுர்மறை தேறும் பெரியோரே நீங்கள்
இதுவரை குருசாமி தன்மகிமை
தயவாய்வெகு - நயமாகவே - செயமாகவே - பயமேயறத்
தான்செப்ப வானந்த மானேமே. (௪௯)

மதுர மெனுங்குரு சாமி மகத்துவம்
அதனை யின்னங்கொஞ்ச மேயறிந்தால்
வகையாய்ச்சிறு - நகையாகவே - தகையாறியே - சுகமாகவே
வழுத்து மெனப்பெரி யோருரைப்பார். (௫௦)

கொடுக்குத் தியாகிக் கிடையூ றுகவந்து
தடுக்கும் கொடும்பாவி போலவுமே
குறியாகவே - எரிதாவிய - பரிதாபமே - பெரிதாகிய
கொடிதா யெரியும் பிளவையுடன். (௫௧)

அடுத்திடும் பந்துக்கள் வந்தி ருக்கமுகம்
கடுத்துச் சடுத்தமாய் அன்னமுண்ணும் [போல்
அரும்பாவிபோல் - நரம்பானதில் - இரும்ப[illegible]-மிரும்பாணி
ஆகாப் பிடரிச் சிலந்திசளும். (௫௨)

14745

பல்லரணையுடன் கல்முள்ளுத் தைத்ததும்
வல்ல பாதசக்ரப் புற்றுகளும்
பரிவாகவே - யரிவாளுடன் - தறிகோடரி - குறியாகவே
பட்டிட வுண்டான காயங்களும். (௫௩)

சொல்லுக் கடங்காத மூடர்போல் வந்திடும்
பொல்லாத வல்லநீர்க் கட்டுகளும்
சூதற்றுளம் - போதித்திட - வாதித்திடும் - வாதத்தொடும்
சுவஸ்தப் படுத்துவார்குரு சாமியவர். (௫௪)

பூவுண்டு காயது காய்ப்ப தில்லைஅல்ல
பூவில்லாக் காயும் புவியிலுண்டு
புனிதர்களும் - இனிதாகவே - தனியாயுணுங் - கனிபோலவே
புகலுவார் மூடர் புகலரிய. (௫௫)

காய்கனி யில்லாத பொந்து மரத்தையுங்
காயமாய்க் காக்கவே நேயமுடன்
கதிப்பாயெவர் - மதிப்பாகவே - துதிக்குக்குரு - சாமியவர்
கண்கண்ட சித்தா விளங்குகிறார். (௫௬)

முன்னம் புராணங்கள் தன்னிலு மேபொருள்
சொன்ன தறியும் முதல்வர்களே
முறையாகநீர் - விரைவாகவே - குருசாமியின் - அருளானதே
முழுது முரைக்கத் தெளிவானேம். (௫௭)

இன்னங் குருசாமி யார்மகிமை கொஞ்சங்
தன்னையு முன்னந்த மாயுரைத்தால்
இன்பாகவே - துன்பானவை - தென்பாகவே - தீர்ந்துவிடும்
என்று பெரியோ ருரைக்கலுற்றார். (௫௮)

கூலிக் கறுத்துப் பிழைக்கக் கொடுவிடம்
காலினிற் றீண்டிய வாறதுபோல்
குடியாள்மனக் - குடியாமலே - படிமீதிலே - வடிவாகவே
கூட வரையாப்புக் கட்டிகளும். (ருகூ)

வேலிக்கு முள்ளிட வேயதுவும் நல்லோர்
காலுக்கு வினையா லடிந்ததுபோல்
விதமுற்றதி - சுதனைப்பெற - மதனத்தொழி - லதனைத்தினம்
விரும்பக் கரப். ரன் வியாதிகளும். (சு0)

நகப்பிளவை சூலைக் கட்டுகளும் பொல்லா
திகரில்லா லிங்கப் புற்றுகளும்
திதமேயவர் - பதமானதே - சதமென்றதி - விதமாகவே
நினைப்பவர்க் கிதெல்லாம் நீங்கிவிடும். (சுக)

செகத்தோர் புகழுங் குருசாமி தன்பெரும்
மகத்துவ மின்னந் தெரிந்தமட்டுஞ்
சித்தமகி - ழுத்தமரே - இத்தினமே - வெற்றியுடன்
சிறியோர்க் குரையுமென் றேயுரைத்தார். (சுஉ)

சித்தம தாகவே யுத்தமர் கள்மனம்
மெத்த மகிழ்ந்தும் உரைக்கலுற்றூர்
சிதறக்குடல் - பதறக்கையு - முதறப்பெரு - முதிரத்தொடும்
சீரில்லா நரம்புச் சிலந்திகளும். (சுங)

பத்தினி மாருக்கு முத்த மர்க்கும்வெகு
தித்திப்பாய்ப் பாலுண்ணும் பாலகர்க்கும்
பதியத்திரு - வதனத்திலே - அதிகப்பெரும் - விதனத்திலே
பருவும் பொல்லாதகன் ஞேசிகளும். (சுச)

பதரூத நாற்கவி கற்றவரே யின்ப
மதுரக் கவியறி யாமூடர்
பழிக்காவிதம்-ஒழிக்காமலே-செழிப்பாயிதன்-பொருளானதை
பாடுவோர் மூடர்க் குரைப்பீர்களே. (௬௫)

குதிரை யெதிர்வர நாக மதட்டிடக்
குதிரை தடாகத்து யானைதன்னைக்
கொத்தும்வித - முத்தமர்கள் - சித்தம்நோக - வுற்றபிணி
குருசாமி யானவர் தீர்த்திடுவார். (௬௬)

சிந்தை கலங்காமற் கோட்டேர்த் திசைநோக்கி
விந்தையா யெண்ணெய் விபூதிவைத்துச்
செகத்தாரெனை - நகைக்காவிதம் - மகத்தாகிய-சுகத்தையருள்
செய்யுமென் றெண்ணெ யெடுத்தவந்து. (௬௭)

வந்த வினைதீரு மென்றிறகா லெண்ணெய்
அந்தமாய்த் தொட்டுப்புண் ணிட்டுகந்து
வாடும்பயிர் - கூடும்படி - யோடும்மழை - சாடும்விதம்
வந்துகாப் பீர்குரு சாமியென்றே. (௬௮)

தோத்திரஞ் செய்திடில் வந்த வினையது
சூரியன் முன்பனி போலாகும்
சுத்தத்தொடு - சித்தத்திலே - பத்திச்சுகஞ் - சித்திக்கவே
சுருக்காகவே யிவ்விதஞ் செய்யுமென்றார். (௬௯)

மூத்தோ ருரையே யமுதமென்று நீதிச்
சாத்திரம் சேர்த்தியாய்ச் சொல்வதுபோல்
முறையாகவே - யரைநாழிகை - தரியாமலே - திசைநோக்கியே
முக்காலுந் தண்டனிட் டெண்ணெய்தனை. (௭௦)

இட்டமாய்க் கோழி யிறகினுற் றொட்டுப்புண்
இட்டு விபூதிதிட்ட மாயிட்டே
யேதும்பிழை - சூதும்வினே - தீதொன்றணு - காதிப்படி
இரக்ஷியு மென்று தியானமுடன். (எக)

அஷ்ட திசைபுகழ் குருசாமி யெண்ணெயைத்
திட்டமாய் மூன்றுநாள் போட்டிடவே
ஆசைப்பெரு - நேசத்துடன் - தாசிக்கிடுங் - காசொப்பன
ஆக வரைவாசி தீர்ந்ததுவே. (எஉ)

இன்ன மரைவாசி தீரக் குருசாமி
தன்னகர்க் கேகவே புன்னதமாய்
இசையாகவே-விசைவண்டியின்-மிசையேறியே யொயிலாகவே
இன்ப முடன்வந்து சேர்வாரும். (எ௩)

முன்னு மிரணியன் ராவணன் செய்துன்பம்
தன்னையுந் தாங்க வரிதாகி
முகுந்தன்பதி - புகுந்தேயினி - மிகுவெந்துயர் - உகந்தேமுனம்
மொழிந்திடத் தேவர்கள் வந்ததுபோல். (எச)

வானு லாவிவரும் பானு வுடன்மழை
தானுங் குளிர்பனி வீசாமல்
வாசங்கன - நேசந்திகழ் - தேசம்புக - மேசம்பிரமம்
ஆகுங் கூடாரவண் டிகளேறி. (எரு)

தானு மொருதுணை யில்லாத பேர்களும்
தானே துயர மிகுந்தனேகர்
தடியூன்றியே - படிமீதிலே - அடியானது - சுடவேவெகு
தாபந்த மோடு வருவாரும். (எசு

இல்லாத வர்பொரு ளுள்ளவ ருங்குண
நல்லவ ருங்கவி வல்லோரும்
இணையாகவே - மனையாளுடன்-கனவான்களுந் - துணையாகவே
யேகமாய் வந்தங்கே சேர்வாரும். (எஎ)

வில்லைச் சொலத்தகு நுதலாள் கந்தரஞ்
சொல்லத் தகுந்த குழலாளும்
வேதப்பொருள் - யாதுற்றறி - நீதத்துட - ஞேதத்தரும்
வேதி யரும்பல சாதியரும். (எஅ)

சங்கரன் மாதவன் சதுமுக னிந்திரன்
செங்கைவே லங்கரன் பாதநெஞ்சில்
தங்குமுய - ரெங்கும்பிர - சங்கம்பெறும் - அங்கன்கும்மி
தான்பாடிக் கோட்டூர் வருவாரும். (எகூ)

கங்கையில் ஸ்நானங்கள் செய்வா ரமுதுண்டு
இங்கித மாயிளைப் பாறுவாரும்
காலங்கலி - காலத்திலே - யாலஞ்சுமை - தாலத்திலே
கண்கண்ட தெய்வங்குரு சாமியென்று. (அ0)

விந்தை யுடன்றுதி செய்வாரும் வந்த
வேதனை யால்மனம் நைவாரும்
வினையாமிது - தனையேதவிர்த்-தெனையாளுவிர் - குணமாகவே
மெய்யான மூர்த்திகுரு சாமியென்பார். (அக)

கையில் லான்பிடிக்க வாயில்லா னுண்டதை
மெய்யாக் கண்ணில்லான் மகிழ்ந்ததுபோல்
கதைகாவிய - மிதமாகவே - யதைவாசியார் - பதராகினர்
காமுகர் போலும் வரும்பிணியே. (அஉ)

தாயில்லாப் பிள்ளையை ரட்சிக்கின்றபிற
தாய்போ லெங்கண்மேற் றயவுசெய்து
சனிபோலவே-தணியாமலே-யனியாயஞ்செய்-பிணியாவையும்
தான்றீர்த்து ரட்சியு மென்றுரைப்பார். (அங)

இந்த விதஞ்சொல்லி வந்தோ ரிருக்கவே
சிந்தை மகிழ்குரு சாமியாரும்
எழுந்தேமன - மகிழ்ந்தேயினிக் - குளிருஞ்சலந் - தனிலேகியே
யின்ப முடன்ஸ்நானஞ் செய்யலுற்றார். (அச)

ஸ்நானமே செய்து விபூதி யணிந்தவர்
தனது மாளிகைச் சவுக்கைதன்னில்
தந்தையவர் - விந்தையுடன் - முந்தையுரை - மந்த்ரமதைத்
தான்செப்ப வாதன மீதுகந்தார். (அரு)

வானவர் கோனுடன் றேவர் முனிவருந்
தானவர் சூரன்செய் துன்பமதால்
வாசர்கயி - லாசர்கிரி - யீசரடி - நேசமுடன்
வந்து பணிந்திடு மாறதுபோல். (அசு)

வந்தவ ரெண்ணெயை முன்னே வைத்துச்சிலர்
வந்தனஞ் செய்தவ ரேதுரைப்பார்
வடிவாகிய - அடியார்படுங் - கொடிதாந்துயர் - மிடிதீர்த்திடில்
மைந்தனுக் குன்பேர்வைப் போமென்பார். (அஎ)

இந்த வினைதனைத் தீர்த்துரட் சித்திடில்
சொந்தமா யிவ்வுயி ருள்ளமட்டும்
இதமாகவே - நிதமாகவுன் - பதமானதை - நினைவாகவே
யேழைக ளாகிய நாங்களுமே. (அஅ)

எப்போதுந் தப்பாம லுன்றனது திவ்ய
பொற்பாத தாமரை போற்றிசெய்வோம்
ஏழைக்குமிவ் - வேளைக்கருள் - நாளைக்கடந் - தாதேயினி
யென்குரு சாமி யென்பாரும். (அகூ)

செப்பம தாகவிவ் வியாதியுந் தீர்க்திடில்
தப்பித மில்லாமல் நாங்களெலாம்
சீராகவுன் - னேராகவே - பேருகவே - காணிக்கையுஞ்
செய்து முடியு மிறக்குகிரும். (கூ0)

இவ்வித மாகத் தியானித் திருக்கவே
தெய்வீக மாங்குரு சாமியவர்
இமையானவை-யமையாதுறு-மெமையாண்டிடக்கமையாகவே
எண்ணெய்கள் மீதுமந் திரமுரைத்தார். (கூக)

செவ்வித மாகவே யெண்ணெய்மேல் மந்திரம்
ஒவ்வியே செப்பி முடிந்ததற்பின்
திரமாகவே - கரமானதைத் - திருநீறதி - லுறவேமிகு
சீக்கிரம் வைத்து மனதுகந்து. (கூஉ)

சரிநான்கு பத்தும் பதினெந் துடன்மல்ல
விரிவா யிதன்மேலாய்ச் செப்புகின்ற
தாக்குந்தொகை-பார்க்கவினி-யேற்கும்பொருள்-நோக்குமதை
தான்கவி வாண ருரைப்பதுபோல். (கூந)

அரிதாகத் தோன்றும் பிள்ளை சிலந்திகள்
சிறிதாய் நசிந்து கசிந்திடவே
ஆதிமறை - யோதும்விதம் - நீதியுடன் - மந்த்ரமதை
யாதிக் குருசாமி தானுரைப்பார், (கூச)

மாரியம்மன் காப்புத் தானெடுத்து மந்திரங்
கூறினு ரென்னெய் மனிதர்முதல்
மார்க்கமுடன் - காக்கவிழி - தீர்க்கமுடன் - பார்த்துமினி
வாய்திறந் தங்கேது செப்பலுற்றார். (கரு)

வாரீ ரிதோவுங்க ளெண்ணெய் கொண்டுமனந்
தேறியே யுங்கள் பதிசேர்ந்து
மறவாமலே - குருவானவர் - திருநாமமே - பெரிதாகவே
மனதில் நினைந்தெண்ணெய் விபூதியிட்டு. (கசா)

பயபக்தி யோடு மிருக்கவே ணும்வெகு
சுயமுற்ற பாதை நடக்கவேணும்
பாரும்வினை - திரும்பினி - நேராகவே - சிராகினுல்
பணமுங் கொடுக்கப் பிரியமானுல். (கஎ)

அயலார் கையினிற் கொடுக்கா மல்வெகு
ஒயிலாவர் தீயலா மில்லையென்றுல்
அன்பாகவே - தம்பாலகர் - நம்பும்பேர்க - ளார்வந்தாலும்
அவர்கள் வசங்கொடுத் தேவிடலாம். (கஅ)

இப்போது நான்சொன்ன வாக்கிய மீறுமல்
செப்பமா யெண்ணெயைத் தானெடுத்தே
யேகுஞ்சுக - மாகும்நேர - மாகுதினி - வேகமுடன்
இருக்கும் பதியது சேருமென்றுர். (கக)

தப்பா தவரவ ரெண்ணெய் களைக்கொண்டே
அப்போ தவரவ ரூர்சேர்ந்து
தவமேவிய - குருசாமியா - ரவரைமனந் - தனிலெண்ணியே
தானெண்ணெய் விபூதி போட்டிடவே. (க00)

தம்பமென் றோரைச் சதிபண்ணித் தாம்வாழ
இன்பமாய்ப் பார்ப்பவர் செல்வமது
சண்டையிடுங் - கெண்டைவிழி - வண்டரிடுந் - தெண்டத்திலும்
தானசித்துப் போகுந் தன்மையைப்போல். (க0க)

அன்பர்க்கு வந்திடுந் துன்பங்க ளிவ்விதம்
தென்பாகத் தீர்ந்துசுக மாகியபின்
ஆசைப்பிர - காசத்துடன் - நேசக்குரு - காணிக்கையும்
அவரவர் சக்திக்குத் தக்கவிதம். (க0உ)

கொண்டுபோய் நாமுங் கொடுப்போமென் றேமகிழ்
கொண்டுள மானந்த மாகவுமே
குன்றுமன - தொன்றுகவே - சென்றூர்சிறு - ம்மைந்தர்களைக்
குலுங்க நகைத்துக் கக்கமேந்தி. (க0ங)

வண்டணி கொண்டையில் தொங்க லொடுமலர்ச்
செண்டுடன் சாயச் சேலைகட்டி
வடிவாகிய - குடைசோடுகள் - கொடிதாம்வெயி - லடியாவிதம்
வாங்கிப் பிடித்தங்கே செல்வாரும். (க0ச)

துரியோ தனனிறங் தைவர் செயித்ததாம்
விரிவான பாரத மல்லபொருள்
தெளிவாகவே-வழியோடிதைச்-சுளுவாகவே-மொழியும்வகை
தேறுங் கவியோர்கள் தாமறிவார். (க0ரு)

அறியோமென் றட்சரங் கற்றறி யார்பொரு
ளறியத் தகாதது போலவுமே
ஐயமற - வையமதின் - மெய்யர்குரு - சாமியவர்
அரிய மகத்துவ மாரறிவார். (க0சு)

சோதி மணிமுடி யாதிசே டன்வெகு
நீதியாய்த் தாங்குமிப் பாரினிலே
திடியாகவே-கொடும்பாதக-மிடியாவையும்-பொடியாக்கிடும்
சொக்கேசர் வைகை தனைநோக்கி. (க0எ)

ஆதியில் தேவர்க் கமிர்தம் பகிர்ந்திடும்
மாது திருமகள் தன்கணவன்
ஆற்றில்வரு - நேர்த்திதனைப் - பார்த்துவரும் - படியாகவே
ஆசையா யேகிய வாறதுபோல். (க0அ)

கூட்டு வண்டி ரயில்வண் டி யேறிவெகு
தாஷ்டிக மான மைந்தருடன்
குணமேமிகுங் - கணவருடன் - மணமாலைக - ளதுசூடியே
குழந்தை களைமடி மீதில்வைத்து. (க0கூ)

பாட்டுக் கிசைராகந் தாளம் புலவர்செய்
ஆட்டுக் கிசையாகக் கூடினாற்போல்
பகருந்திரு - மகிழும்மெவர் - புகழும்மது - மிகவோங்கிய
பதியுயர் கோட்டேர் வருவாரும். (கக0)

தடியூன்றி முன்னடந் தோர்குரு சாமியால்
கொடிய பிணியாவுந் தீர்ந்தபின்பு
தங்கப்பணி - யங்கத்திலே - திங்கட்கிணை - பொங்கத்துடன்
தாளொளி வீச வருவாரும். (கக௧)

அடிக்கடி மண்ணில் விழுந்து மவஸ்தையாய்த்
துடித்துத் துடித்து நடந்தவர்கள்
அன்னநடை - யென்னவெகு - சின்னவிடை - தன்னிலொயில்
அழகுயர் சேலைகள் தானுடுத்தி. (கக௨)

தங்க வோலையுடன் மேல்முருகு கொப்பும்
இங்கிதக் கிண்கிணி பாதசரம்
சத்தமிட - மெத்தவதி - சித்தமகிழ் - துத்தமிமார்
தானேகிக் கோட்டேர் வருவாரும். (கக௩)

திங்கள் வதன மிலங்கிட வேயிரு
செங்கை வளையல் துலங்கிடவே
சேலின்விழி - யாலுமவள் - தாளிலணி - தண்டையது
செவிதாகச் சத்தம் புடைத்திடவே. (கக௪)

சாந்த குணமாதர் காதிற் சவடியும்
சேர்ந்ததண் டொட்டியுங் கொப்புகளும்
சதிராகவே - கதிரோனிக - ரெதிராகவே - யொளிவீசிடத்
தான்பூண்டு கோட்டூர் வருவாரும். (கக௫)

பார்த்த மிகுந்த கணவர்க ளோடுமே
காந்த மாகவே வழிகூடி
பட்சத்தொடு - மெச்சப்புவி - ரட்சித்தருள் - குருசாமியார்
பாதம் வணங்க வருவாரும். (கக௬)

விந்தை யுடன்கடுக்கன் முருகு வேஷ்டி
சிந்தையில் லாவித மேயணிந்து
விரும்புமல - ரரும்புஞ்சூடி - திரும்பும்படி - யொயிலாகவே
வேக முடனே வருவாரும். (கக௭)

சிந்தை மகிழ்ந்து மூவாறு தலைகொம்பு
விந்தைவாய்த் தொண்ணூற் றெண்ணுகா லீரைஞ்சும் [தை
சேர்த்துக்கவி-கோத்துப்பொருள்-பார்த்துத்தெளி- வோருங்க
செப்பியே கோட்டூர் வருவாரும். (கக௮)

வல்ல திருக்கர மீதி லுற்றவிர
லெல்லாஞ் சரியா யிருக்கிறதோ
வாசங்கன - தேசம்மதி - னேசந்திரு - மாதும்வளர்
வலியோ ரும்மிகுந் தெளியோரும். (கக௯)

எல்லோரும் வந்தங்கே சேர்வாரு மன்னத்தை
நல்லாய்ப் புசித்திளைப் பாறுவாரும்
ஏகக்கன - போகத்தொடு - தேகத்திலே - சோகந்தவிர்
இசையாய் இலைபாக் கருந்துவாரும். (கஉ0)

வந்தவ ரெல்லாங் குருசாமி மாளிகை
சொந்தமாய்ச் சென்றங் கிருந்திடவே
வச்ராயுத - விச்சையுடன் - மெச்சுங்கோலு - உச்சிதமாய்
வந்தங் கிருந்திடும் பான்மையைப்போல். (கஉக)

சிந்தை மகிழ்ந்து குருசாமி யார்செப்பும்
மந்திரச் சவுக்கைவந் தேயுகந்தார்
சிறியோர்வெகு-பெரியோர்களும்-தூரிதாகவே-காணிக்கையுந்
தெண்ட னிட்டங்கே கொடுப்பாரும். (கஉஉ)

முன்ன முரைத்த படியது போல்முடி
தன்னை யிறக்கும்பே ரேயனேகம்
முந்தும்பேர்க - ளிந்தவிதஞ் - சிந்தைமகிழ் - குழந்தைகள்பேர்
முகமலர்ந் தேகுரு சாமியென்றே. (கஉங)

பேர்வைத்துப் பொங்கல்வைப் பாரு மெண்ணெயைச்
சீருடன் வைத்துத் தொழுவாரும் [ய்ப்
பின்னுஞ்சில-ரெண்ணெய்தனை-முன்னம்வைத்தா-ருன்னதமா
பிரிய முடன்குரு சாமியவர். (கஉச)

திருநீறு மெண்ணெயும் மந்திரித் தும்மவர்
மறுமொழி யிங்கேது சொல்லலுற்றார்
சிந்தைமகிழ்ந் - தெந்தனிடம் - வந்தவரே - விந்தையுடன்
செயமா யுங்கள்பதி சேருமென்றார். (கஉரு)

முந்தினோர் சொன்ன மொழிப்படி காணிக்கை
தந்தவர் தங்கள் பதிசேர்ந்தார்
முழுதுமவர் - பதமானதைத் - தொழுதுஞ்சில - ரிதமாகவே
முறைப்படி யெண்ணெய்கள் கொண்டேகி. (கஉசு)

பிந்தினோர் தங்கள் பதிசேர்ந்தவ் வெண்ணெயை
அந்திசந்தி போடப் புண்களெல்லாம்
பிசகாவிதம் - நிசமாகவே - வசைநீங்கியே - யிசையாகவே
பிந்தினோர்க் குஞ்சுக மானதுவே. (கஉஎ)

செப்பம தாகவே நாள்தவ றாவிதம்
இப்படி யாருஞ் சுகம்பெறுவார்
திங்களவை - நீங்கவெகு - தேங்காய்பழந் - காணிக்கையுஞ்
செய்வா ரிலைபாக்கு மீந்திடுவார். (கஉஅ)

கூட தரிசனங் கண்டவர்க்குத் துன்பம்
நாடாது பாவ மணுகாது
சுக்கிலவார - மெக்கியமிகு - முக்கியமம்மா - வாசியிலே
கூட தரிசன மேயதிகம். (கஉகூ)

நாடோர் புகழ்குரு சாமி மகத்துவம்
நானறிந்த மட்டு மேயுரைத்தேன்
நன்பாய்மனக் - தென்பாகவே - யன்பேமிகுங் - தின்பமுடன்
நற்கவி யோர்கள் பொறுக்கவேண்டும். (௯0)

## விருத்தம்.

ஏடதனி லாடுமெழுத் தாணி போது
மிப்புவியி லெண்பத்து நான்கு லட்சம்
கூடதனி னிறைந்திருக்குஞ் சோதி யான
கொன்றைபிச்சி முல்லையணி சிவனார் பாதம்
வாடாத தனதுநெஞ்சத் திருக்கும் யோகன்
மகிழ்கோட்டேர்க் குருசாமி யண்ண லார்தஞ்
சூடதரி சனமதனைக் கண்ட பேர்க்குத்
துன்பவினை யணுகாது சனிதொ டாதே.

கோட்டேர்க் குருசாமி ஒயிற்கும்மி
முற்றிற்று.